**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**Spl.C.No.7/2021**

**22/01/2025**

அரசு தரப்பு சாட்சி 7 வெற்றிகொண்டான்:

CRLMP No.5105/2024 மனுவில் 11.09.2024 தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி அரசு தரப்பு சாட்சி 7 வெற்றிகொண்டான் த/பெ.சீதாராமன் திரும்ப அழைக்கப்பட்டு, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் சம்பவ காலத்திற்கு முன்பு எவ்வளவு நாட்களாக சுத்திபட்டு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன் என்றால் நான் மேற்படி கிராமத்திற்கு பொறுப்பு கிராம நிர்வாக அலுவலராக தான் பணிபுரிந்தேன். சம்பவ இடத்திற்கு பின்பக்கம் சுமார் 5 கிமீ அளவிற்கு பெரிய காடு உள்ளது என்றால் சரிதான். எனக்கு தொலைபேசி மூலம் தகவல் வந்ததா என்றால் ஆமாம். நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் ஆமாம். நான் காவல் நிலையத்தில் ஒரு கையெழுத்து போட்டேனா என்றால் போட்டேன். சம்பவ இடத்திற்கு அருகில் கெங்கவரம் ரோடு செல்கிறது என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கு நான் சென்றபோது அங்கு பொதுமக்கள் சுமார் 50 நபர்கள் கூடியிருந்தார்கள் என்றால் ஆமாம். நான் சம்பவ இடத்தில் சம்பவத்தன்று கையொப்பம் போட்டேனா என்றால் இல்லை. சம்பவம் குறித்து காவல் நிலையத்திற்கு நான் தகவல் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் தயாரித்து வைத்திருந்த

வாக்குமூலத்தில் நான் கையொப்பம் போட்டேனா என்றால் என் முன்னிலையிலும் கிராம உதவியாளர் முன்னிலையிலும் தாமோதரன் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை ஆய்வாளர் தட்டச்சு செய்து எங்களிடம் கையொப்பம் வாங்கினார். நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் போட்டேன் என்றும் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அவர் நிலத்தை காட்டுபன்றியிடமிருந்து காப்பாற்றுவதற்காக நிலத்தில் மின்சாரவேலி அமைத்திருந்ததாக நான் ஆய்வாளர் விசாரித்த போது அளித்த வாக்குமூலத்தில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் ஆய்வாளருக்காக பொய்யான தகவல் படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.